

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 38.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குளிரூட்டப்பட்ட நூலகமாக புதுப்பிக்கப்பட்ட மெரினா கிளை நூலகத்தை நேற்று முன்தினம் (16.4.2025) திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்தர மோகன், பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், சென்னை மாநகர நூலக ஆணைக்குழுத் தலைவர் கவிஞர் மனுஷ்யபுத்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பேச்சிப்பாறை – பெருஞ்சாணி அணையிலிருந்து வரும் கால்வாய்கள் சீரமைப்பு :

# திட்ட அறிக்கை கிடைத்தவுடன் நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – கவன ஈர்ப்பில் அமைச்சர் துரைமுருகன் உறுதி!

**சென்னை, ஏப். 18 -**

**கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணை களிலிருந்து வருகின்ற கோதையாறு வடி நிலத்திற்குட்பட்ட கால்வாய் களை சீரமைப்பது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை - விரிவான மதிப்பீடு பெறப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் பேசுகையில் உறுதிபடத் தெரிவித்தார்.**



சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளிலிருந்து வருகின்ற கால்வாய்களை சீரமைப்பது குறித்த சிறப்பு கவன ஈர்ப்பு கொண்டு வந்து காங்கிரஸ் செ.ராஜேஷ்குமார், அ.தி.மு.க. ந.தளவாய்சுந்தரம் ஆகியோர் கொண்டு வந்து பேசினார்.

இதற்கு பதிலளித்து நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:-

விவர அறிக்கை ஒன்று உறுப்பினரின் மேஜையின் மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

விவர அறிக்கையில், "கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து வருகின்ற கோதையாறு வடிநிலத்திற்குட்பட்ட கால்வாய்களை சீரமைப்பது தொடர்பாக, WAPCOS நிறுவனம்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,085.062 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை மற்றும் விரிவான மதிப்பீடு பெறப்பட்டவுடன் உரிய ஒப்புதல் மற்றும் நிதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்." என்று விவர அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தது.

Lift irrigation வந்துவிட்டது என்பது அர்த்தமல்ல. எல்லோர் தொகுதிக்கும் எல்லோரும் கேட்பதுதான். அவர் எவ்வளவு நாள் கேட்டு, எவ்வளவு நாள் செய்யாமல் இருந்தது பயந்துகொண்டு தோவாளையிலிருந்து போட வேண்டும் என்றார். ஒரு விஷயத்தை வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் இரண்டு பேரும் பேசியது மட்டுமல்ல, உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த இங்கு உட்கார்ந்து இருப்பவர் களுக்கும் சேர்த்தே நான் சொல்கிறேன். உங்களுடைய கோபத்தோடும், வேகத்தோடும் நீங்கள் பேசினால்கூட, அதை நான் ஒத்துக் கொள்வேன். காரணம், நாஞ்சில் நாடு முழுக்க, முழுக்க விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற ஒன்று. வேறு எந்த தொழிற்சாலையும் கிடையாது. காலமெல்லாம் செய்தாக வேண்டும்.

ஆகையினால்தான் அந்த மாவட்டத்திலே, நண்பர் சொன்னதைபோல, நீங்கள் சொன்னதை போல, ஆறுகள், குளங்கள் இருக்கும். மனிதனுடைய நரம்பு மண்டலத்தில் ஓடுவதைபோல, ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். ஆனால், அந்த ஆறுகள் எல்லாம் இப்போது வந்த பெருமழையால் கரைகளெல்லாம் உடைந்து போக முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக நாங்கள் எல்லாவற்றையும் சேர்த்து அவைகளை சீர்செய்ய வேண்டு மென்பதற்காகத்தான் DPR தயாரிக்க இரண்டு, மூன்று கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். அதனுடைய result இன்னும் வரவில்லை. தேர்தலுக்கு முன்பே, தலைவரிடத்திலே பேசினேன். இது நீண்ட நாட்களாக இருக்கின்ற பிரச்சினை. நாம் தனிக்கவனம் செலுத்தி, தனி நிதி ஒதுக்கி நாஞ்சில் நாட்டைக் காப்பாற்றாவிட்டால் அது வேறெங்கோ போய்விடும் என்ற நிலைமையைத் தெரிவித்திருக்கிறேன்.

எனவே, நான் சொல்வது இதுதான். மறுபடி விளக்கமாக நான் சொல்ல தேவையில்லை. உங்களுக்கு எல்லாவற்றையும் எடுத்து நேரடியாக இப்போது மொத்தமாக 96 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகிறது. 2024 ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை பெய்த காரணத்தால் 26 இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்பகுதியை தற்காலிகமாக அமைத்திருக்கிறோம். மற்ற 26 இடங்களில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் ஒதுக்குவதற்காக, பெரும்பணிக்காகத்தான் நீங்களே சொன்னதைப்போல 1,866 கோடி ரூபாய் உத்தேசமாக போட்டிருக்கிறார்கள். இது போதுமானதாக இருக்காது. இதற்குமேல்தான் போகும். எனவே, இந்த அவையிலே நான் உங்களுக்கு சொல்கிறேன், விரைவில் DPR report வாங்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கவன ஈர்ப்பிற்கு பதிலளித்து பேசினார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (16.04.2025) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் 2025-2026 நிதியாண்டின் சட்டமன்ற அறிவிப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும், 2026 பொங்கல் திருநாளில் வேட்டி சேலை வழங்கும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் துறை சார்ந்த திட்டங்களின்பணி முன்னேற்றம் குறித்து, அலுவர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்தறி துறை இயக்குநர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், துணிநூல் துறை இயக்குநர் திருமதி இரா. லலிதா மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# செங்கம் நகராட்சியில் குண்டும் - குழியுமான சாலைகளை செப்பனிடுக!

## சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் மு.பெ.கிரி கோரிக்கை!

**சென்னை, ஏப். 18–**

**சட்டப்பேரவையில் செங்கம் தொகுதி கழக உறுப்பினர் மு.பெ.கிரி எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே. என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:**



**மு.பெ. கிரி:** செங்கம் நகராட்சியாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே, பேரூராட்சியாக இருக்கும்போது பல சாலைகள் 90 சதவிகிதத் திற்கும்மேல் குண்டும், குழியுமாக இருந்தன. இந்த ஆண்டு அந்தச் சாலைகளையும், கால்வாய்களையும் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**கே.என். நேரு:** ஏற்கெனவே நம்முடைய உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியை கேட்டார்கள். எனவே, இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள், நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளிலே சாலைகளை சரிசெய்வதற்காக 3,780 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி தந்திருக்கிறார்கள். எனவே, செங்கம் நகராட்சியைப் பொருத்தளவு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரும் அந்தப் பகுதியைப் பார்க்க வேண்டும். அதேபோன்று, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை குடிநீர் திட்டத்தை பற்றியும் பேசியிருக்கிறார். எனவே, செங்கம் நகராட்சியைப் பற்றி பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார். உறுப்பினர் கோரியது போல், அங்கே எந்தெந்த சாலை பிரதான சாலை இருக்குமானால் நிச்சயமாக அதை எடுத்து, உடனடியாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

# காரைக்குடியில் நீர்மோர் பந்தல் திறப்பு விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை. ஏப்.18 -

சிவகங்கை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் சார்பில் காரைக்குடியில் நீர் மோர் பந்தல் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாநகர மேயர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.முத்துத்துரை தலைமையில் மாநகர துணை மேயர் மாநகரச் செயலாளர் நா.குணசேகரன் முன்னிலையில் நடைபெற்ற நீர் மோர் பந்தலை மாவட்ட கழகச் செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்து பொதுமக்களுக்கு பழரசபானங்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார். மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணைத் தலைவர் காரை சுரேஷ் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன், கலைஞர் தமிழ்ச்சங்க செயலாளர் பொறியாளர் செந்தில் குமார் மற்றும் பலர் வாழ்த்தி பேசினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, ஒன்றிய செயலாளர்கள் நா.நெடுஞ்செழியன், கே.எஸ்.ஆனந்த் மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் கழக அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் வழங்கிட

# சட்ட மசோதா நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## மாற்றுத்திறனாளிகள் சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை, ஏப், 18 -

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ. தங்கம் விடுதுள்ள அறிக்கை வருமாறு;

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் முதல் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்து மாற்றுத்திறனாளிகளின் இதயங்களின் வாழ்ந்து கொண்டு வருகிறார் என்பதை மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும்,ஒரு வரலாற்று சிறப்பு மிக்க அம்சமாக மாற்றுத்திறனாளிகள் சமூகம் "உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் பிரதிநிதித்துவம்" வழங்கிட சட்டமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றிய மாற்றுத்திறனாளிகளின் காவலர், தமிழ்நாடு முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றியையும், பாராட்டுகளையும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் நன்றியும், பாராட்டும் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.



சட்டமேதை பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த நாள் – சமத்துவ நாள் விழாவை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்டம் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ஆகியோர் அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினர். இதில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் .ச.முரசொலி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, வருவாய் கோட்டாட்சியர் இலக்கியா, அரசு வழக்கறிஞர் பா.விஜயகுமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.




தி.மு.க.
இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்
புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

சேலம் மத்திய மற்றும் விருதுநகர் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் மத்திய | வீரபாண்டியார் அரங்கம், கலைஞர் மாளிகை, சேலம். |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | விருதுநகர் தெற்கு | கந்தசாமி ராஜம்மாள் திருமண மண்டபம், விருதுநகர் |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 16-04-2025

